**ஜூலை – 30**

# TNPSC துளிகள்

- ❖ இந்திய - வியட்நாம் பொருளாதார தொடர்புகளுக்கான சர்வதேச மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது. வியட்நாமுடனான பொருளாதார உறவுகளை அதிகரிக்கச் செய்வது மற்றும் அரசின் கிழக்கு நோக்கிய கொள்கைகளை செயல்படுத்துவது ஆகியன இதன் முக்கிய நோக்கங்களாகும்.
- ❖ துணைக் குடியரசுத் தலைவர் M.வெங்கய்யா நாயுடு பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார். பல்கலைக்கழகத்தின் பார்வையாளர் பதவியில் உள்ள குடியரசுத் தலைவரால் இந்நியமனத்திற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. வேந்தரின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும்.
- ❖ இந்திய – UK (ஐக்கியப் பேரரசு) அறிவியல் மற்றும் புத்தாக்க கழகத்தின் 6வது சந்திப்பு புது தில்லியில் நடைபெற்றது. இதில் இரண்டு நாடுகளுக்கிடையேயான அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஒத்துழைப்புகளுக்கான வெவ்வேறு வித பிரச்சினைகள் விவாதிக்கப்படும்.

# தமிழ்நாடு செய்திகள்

## உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வினைத்திறன் மிக்க காற்று தூய்மையாக்கும் கருவி - 'விஸ்தார்'

- ❖ சென்னையின் இந்திய தொழில்நுட்ப நிறுவனமானது (Indian Institute of Technology - IIT) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வினைத்திறன் மிக்க காற்று தூய்மையாக்கும் கருவி 'விஸ்தாரி'னை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இது IIT-ன் உதவி பெற்ற தொடக்கநிலை திட்டமான, 'AirOk' - வினால் மேம்படுத்தப்பட்டது.



- ❖ தனிப்பட்ட பொருட்கள், நுண்ணுயிரிகள், பூஞ்சைகள் மற்றும் வாயுப் பொருட்கள் போன்ற வெவ்வேறு மாசுக்களை வடிகட்டும் திறனை விஸ்தார் கொண்டுள்ளது.

- இது தற்பொழுது சந்தையில் உள்ள மற்ற காற்று தூய்மையாக்கும் கருவிகளை விட இரண்டு மடங்கு அதிக வாழ்நாளினை கொண்டது ஆகும். இக்கருவியின் ஆயுட்காலம் ஒரு வருடம் ஆகும்.

# தேசியச் செய்திகள்

## தேசிய ஹெப்படைட்டிஸ் கட்டுப்பாட்டு திட்டம்

- மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் உலக மஞ்சள் காமாலை தின விழாவின் போது (ஜூலை 28) ஹெப்படைட்டிஸ் C-யினை கட்டுப்படுத்துவதற்கான தேசிய ஹெப்படைட்டிஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை தொடங்கியது.
- கல்லீரல் புற்றுநோய், ஈரல் நோய் மற்றும் கடுமையான கல்லீரல் செயலிழப்பு ஆகியவற்றின் முக்கிய காரணியான ஹெப்படைட்டிஸினை தடுத்தல் மற்றும் சிகிச்சையினை வழங்குவதில் இத்திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது.
- இத்திட்டம் தேசிய சுகாதார திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இத்திட்டத்தின் கீழ் ஹெப்படைட்டிஸ் B மற்றும் ஹெப்படைட்டிஸ் C தொற்றுகளுக்கான விலையுயர்ந்த வைரஸ் எதிர்ப்பு மருந்துகள் எல்லா அரசு மருத்துவமனைகளிலும் இலவசமாக கிடைக்கும்.

## ஆசிய நாடுகளுக்கான திடீர் வெள்ளப்பெருக்கு எச்சரிக்கை வழங்குவதற்கான மாதிரி

- உலக வளிமண்டலவியல் அமைப்பானது (World Meteorological Organization - WMO) வியட்நாம், இலங்கை, மியான்மர் மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட ஆசிய நாடுகளுக்கு வெள்ளப்பெருக்கு பற்றிய எச்சரிக்கைகளை முன்கூட்டியே அளிப்பதற்கான திருத்தியமைக்கப்பட்ட மாதிரியை உருவாக்குவதற்கான முகவையாக இந்தியாவை நியமித்துள்ளது.
- இம்மாதிரி திடீர் வெள்ளப்பெருக்கு வழிகாட்டுதல் அமைப்பு என்று அழைக்கப்படும்.
- புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் இந்திய வளிமண்டலவியல் துறை (Indian Meteorological Department - IMD) இந்த வானிலை மாதிரியினை அமைப்பதற்கு பணியாற்றும்.
- அமெரிக்காவினால் உருவாக்கப்பட்டு WMO-க்கு வழங்கப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட இம்மாதிரி திடீர் வெள்ளப்பெருக்கு பற்றிய எச்சரிக்கையினை 6 மணி நேரத்திற்கு முன்பாகவே வழங்கும்.
- இந்த முன் அறிவிப்பு மாதிரியின் மூலம் பயன்பெறும் நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தானும் ஒன்றாகும். ஆனால் பாகிஸ்தான் இதில் பங்குபெற மறுத்துவிட்டது.

## சத்யநிஸ்தா திட்டம்

- இந்திய ரயில்வே பொது ஆட்சி முறையில் நன்னெறிமுறைகளுக்கான ஒரு திட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளது. புது தில்லியில் உள்ள தேசிய ரயில் அருங்காட்சியகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சத்யநிஸ்தா என்ற திட்டத்தினை

தொடங்கியது.

- நாட்டில் அரசு அமைப்பினால் இதுபோன்ற நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- நல்ல நெறிமுறைகளை கடைபிடித்தல் மற்றும் பணியில் உயர்நிலையான நேர்மையினை கடைபிடித்தல் போன்றவற்றின் தேவைகள் பற்றிய உணர்வினை எல்லா ரயில்வே ஊழியர்களிடமும் ஏற்படுத்துவதே சத்யநிஸ்தா திட்டத்தின் நோக்கமாகும்.

## கடத்தலுக்கு எதிரான மசோதா

- ஆள் கடத்தல் (தடுப்பு, பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு) மசோதா, 2018 க்கு மக்களவை அனுமதி அளித்துள்ளது.
- இம்மசோதா கடத்தலைத் தடுத்தல், மீட்டெடுத்தல் மற்றும் கடத்தப்பட்ட நபர்களுக்கான புனர்வாழ்வு அளித்தல் மற்றும் கடத்தல் தொடர்பான வழக்குகளை விசாரிக்க தேசிய கடத்தலுக்கெதிரான கழகத்தினை அமைத்தல் ஆகியவற்றுக்கு வழி வகுக்கிறது.
- இம்மசோதா வழக்கு விசாரணைகளை ஒரு வருடத்திற்குள் முடிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் நீதிமன்றங்களை அமைக்க வழிவகுக்கும்.

**PROVISIONS IN BILL**

- In aggravated trafficking crimes, **punishment ranges from minimum 10 years' RI to life and fine not less than ₹1 lakh**
- NIA to perform tasks of **Anti-Trafficking Bureau** at national level
- **Bill provides for attachment & forfeiture of property** and also **proceeds from crime**
- **Time-bound trial and repatriation of victims** – within a period of one year from taking cognisance
- **Victims entitled to interim relief within 30 days** to address their physical, mental trauma and appropriate relief within 60 days from the date of filing of charge sheet
- **Rehabilitation fund, designated courts** in each district for speedy trial

- மாநில கடத்தலுக்கெதிரான குழுவின் வழிமுறைகள் படி இம்மசோதாவின் கீழ் செயல்களை ஆற்றுவதற்கான பொறுப்புகள், நிவாரண மற்றும் புனர்வாழ்வு சேவைகளை வழங்குவதற்கான பொறுப்புகள் ஆகியவற்றைக் கொண்ட மாநில கிளை முகவரை நியமனம் செய்வதையும் இம்மசோதா மாநிலங்களுக்கு கட்டாயமாக்கியுள்ளது.
- மேலும் இம்மசோதா, கடத்தலுக்கெதிரான நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு குழுக்களை (Anti-Trafficking Relief & Habilitation Committee) தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் நிறுவுவதற்கும் வழிவகுக்கிறது.
- இந்த மசோதா, மிகவும் மோசமான கடத்தலுக்கு 10 வருடங்கள் முதல் வாழ்நாள் சிறை (ஆயுள் தண்டனை) வரையிலான கடுமையான தண்டனையினை வழங்குகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## B மொலாசஸ் மற்றும் கரும்புச் சாறிலிருந்து நேரடி முறையில் எத்தனால் தயாரித்தல்

- மத்திய உணவு அமைச்சகம், கரும்புச்சாறு (அ) இடைநிலை விளைபொருளான 'B' மொலாசஸிலிருந்து நேரடியாக எத்தனால் தயாரிப்பதற்கு சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்குவது பற்றிய முடிவினை அறிவித்துள்ளது.
- இது தொடர்பாக கரும்புக் கட்டுப்பாடு உத்தரவு, 1966 திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.
- கரும்புச்சாறு (அ) B மொலாசஸிலிருந்து எத்தனால் தயாரிப்பது அதிகப்படியான உற்பத்தியை திசைதிருப்ப உதவும்.
- சர்க்கரை ஆலைகள் 2017-2018 கரும்புக் காலத்தின் போது OMC - களுக்கு (Overseas Manpower Corporation Ltd) எத்தனாலை விற்பதன் மூலம் 5,000 கோடி ரூபாய் வருவாய் ஈட்டலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.
- எத்தனாலை பெட்ரோலுடன் கலப்பதற்காக OMC ஆனது சர்க்கரை ஆலைகளிலிருந்து எத்தனாலை வாங்குகின்றன.
- பெட்ரோலுடன் எத்தனாலை கலப்பது 10% வரை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது ஆனால், எத்தனால் போதிய அளவு இல்லாததால் 4% வரை மட்டுமே கலக்கப்படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## சர்மிளா தாகூர் - ஹோனொரிஸ் காசா

- பாலிவுட் நடிகை சர்மிளா தாகூர் அவர்களுக்கு காசி நஸ்ரூல் பல்கலைக்கழகத்தில் மேற்கு வங்க ஆளுநர் கேசரி நாத் திரிபாதி இலக்கியத்திற்கான முனைவர் பட்டத்தினை (D.Lit) (ஹோனொரிஸ் காசா) வழங்கினார்.
- பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தின் புகழ்பெற்ற அறிவியலாளர் S.M.யூசஃப் (D.Sc) அறிவியலுக்கான முனைவர் பட்டத்தினை (Honoris Causa) பெற்றார்.
- முன்பாக காசி நஸ்ரூல் பல்கலைக்கழகம் மதிப்புமிக்க D.Lit பட்டத்தினை வங்காள தேசத்தின் பிரதம மந்திரி ஷேக் ஹசினாவிற்கு அதன் மூன்றாவது பட்டமளிப்பு விழாவில் வழங்கியது.

# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய மகளிர் கலப்பு வில்வித்தை அணி


- உலக தர வரிசைப்பட்டியலில் இந்திய மகளிர் கலப்பு வில்வித்தை அணி முதலிடத்தைப் பெற்று வரலாறு படைத்துள்ளது.
- அன்டல்யா மற்றும் பெர்லின் உலகக் கோப்பைகளில் இரட்டை வெள்ளிப்

பதக்கத்தினை வெல்லும் முயற்சியுடன் இந்திய மகளிர் கலப்பு வில்வித்தை அணி முன்னணியில் உள்ளது.

# முக்கிய தினங்கள்

## உலக ஹெப்படைட்டிஸ் தினம் - ஜூலை 28

- உலக ஹெப்படைட்டிஸ் தினம் உலகம் முழுவதும் ஹெப்படைட்டிஸ் பற்றிய விழிப்புணர்வினை பரப்புவதற்கு வேண்டி ஒவ்வொரு வருடமும் ஜூலை 28 அன்று கடைபிடிக்கப்படுகிறது.
- உலக ஹெப்படைட்டிஸ் தினம் 2018-ன் கருத்துரு, "சோதனை மற்றும் ஹெப்படைட்டிஸ் சிகிச்சை"




- இத்தினம் 2010-லிருந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இது உலக சுகாதார அமைப்பினால் (World Health Organization - WHO) குறித்துக்காட்டப்பட்ட 8 அதிகாரப் பூர்வ உலகப் பொதுச் சுகாதாரப் பிரச்சாரங்களில் ஒன்றாகும்.
- ஜூலை 28 அன்று ஹெப்படைட்டிஸ் B வைரஸினை கண்டுபிடித்த பேராசிரியர் பரூச் புளூம்பெர்க்கின் பிறந்த ஆண்டு நிறைவுநாளினை குறிப்பிட்டுக் காட்டுவதற்காக இத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இதன் கண்டுபிடிப்புக்காக உடலியல் (அ) மருத்துவத்திற்கான நோபல் பரிசு (1976) இவருக்கு வழங்கப்பட்டது.

## சர்வதேச புலிகள் தினம் - ஜூலை 29

- புலிகள் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு வருடமும் ஜூலை 29 அன்று சர்வதேச புலிகள் தினம் (உலக புலிகள் தினம் என்றும் அறியப்படுகிறது) கொண்டாடப்படுகிறது.
- 2010ம் ஆண்டு செயின்ட் பீட்டர்ஸ்பர்க் புலிகள் உச்சி மாநாட்டில் சர்வதேச புலிகள் தினம் நிறுவப்பட்டது.





- ஆசிய ஓனார் காலண்டரின் அடுத்த புலிகளின் வருடமான 2022-ல் புலிகளின் எண்ணிக்கையினை இரட்டிக்கச் செய்யும் நோக்கத்துடன புலிகள் பாதுகாப்பு மீதான செயின்ட் பீட்டர்ஸ்பர்க் அறிவிப்பு இந்த உச்சி மாநாட்டில் வெளியிடப்பட்டது.

# இதரச் செய்திகள்

## FDI நம்பிக்கை குறியீடு

- AT கியர்னியின் அறிக்கையின் படி FDI-க்கான கவன ஈர்ப்புக்கான விதத்தில் முதல் 10 இடங்களில் இருந்து இந்தியா வெளியேறி அடுத்த இடத்தில் உள்ளது.

Figure 1
**2018 A.T. Kearney FDI Confidence Index®**




- AT கியர்னியின் FDI நம்பிக்கை குறியீடு 2018-ல் இந்தியா 11வது இடத்தில் உள்ளது. இக்குறியீடுகளில் இந்தியா 2016-ல் 9வது இடத்திலும் 2017-ல் 8வது இடத்திலும் இருந்தது.

- இந்த அறிக்கை அந்நிய முதலீட்டு மேம்பாட்டு கழகத்தின் நீக்கத்தினையும் சில்லறை வியாபாரம், விமானப் போக்குவரத்து மற்றும் உயிரி மருத்துவ தொழிற்சாலைகளுக்கான அந்நிய முதலீட்டு தொடக்க நிலைகளுக்கான தாராளமயமாக்குதலையும் உயர்த்திக் கூறியுள்ளது.

- - - - - - - - - - - - - - -